பக்கங்கள்:10 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2053 பங்குனி 12 சனிக்கிழமை 26.03.2022 கதிர் 141

**இனி இது ரகசியம் அல்ல!**

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ - தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சில் நடைபெற்ற விடயங்கள் குறித்து இணையத் தளங்களிலும் சமூக ஊடகங்களிலும் பலசெய்திகள் வெளிவந்துவிட்டன - சம்பந்தன் மேசையில் அடித்துப் பேரினார்

2



## நான்கு பிரச்சினைகளுக்கு விரைந்து தீர்வுகாண முடிவு

### அரசியல் தீர்வு அடுத்த கட்டத்தில் ஆராய்வு; கோட்டா - கூட்டமைப்பு பேச்சில் தீர்மானம்

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசுக்கும் இரா. சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையில் நேரடி சமரசப் பேச்சு நேற்று ஆரம்பமாகி மூன்று மணி நேரம் நடைபெற்றது.

கூட்டமைப்பு சுட்டிக்காட்டிய நான்கு உடனடிப்

9

# 13 ஐ முழுமையாக அமுல்படுத்த ஏன் தயக்கம் காட்டுகின்றீர்கள்?

### கோட்டா முன் மேசையில் அறைந்த சம்பந்தன்



கொழும்பு, மார்ச் 26

அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்துவதில் உங்களுக்கு இருக்கின்ற பிரச்சினை என்ன?

- இவ்வாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ முன்னிலையில் மேசையில் அடித்துக் கேட்டார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன்.

9

## மீண்டும் எகிறியது பெற்றோல் விலை

நாட்டில் நேற்று நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும் வகையில் பெற்றோல் விலையை அதிகரிப்பதற்கு லங்கா ஐ.ஓ.சி. நிறுவனம் தீர்மானித்துள்ளது.

இதன்படி சகலவிதமான பெற்றோல் வகைகளின் விலையும் 49 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

குறுகிய காலப்பகுதிக்குள் லங்கா ஐ.ஓ.சி. நிறுவனம் எரிபொருள் விலையை அதிகரித்த மூன்றாவது சந்தர்ப்பம் இதுவாகும்.

## ஐ.தே.கவின் போராட்டத்தில் சம்பிக்க அணியும் பங்கேற்பு

ஐக்கிய தேசியக் கட்சியால் கொழும்பில் நேற்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்த சத்தியாக்கிரகப் போராட்டத்தில், சம்பிக்க ரணவக்க தலைமையிலான 43ஆம் படையணியின் உறுப்பினர்களும் கலந்துகொண்டனர்.

9

## ஆட்சி மாற்றம் நோக்கம் அல்ல

### ஐ.தே.க. தெரிவிப்பு

தேசிய வேலைத்திட்டத்தை உருவாக்குவதே எமது நோக்கம், மாறாக ஆட்சி மாற்றம் அல்ல என்று ஐக்கிய தேசியக் கட்சியின் உப

9



## நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு ஒன்றிணைந்து செயற்படுவோம்

### கூட்டமைப்புக்கு ஜனாதிபதி அழைப்பு



நாட்டைக் கட்டியெழுப்ப ஒன்றிணைந்து செயற்படுவோம் என்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் தெரிவித்தார்.

நாட்டு மக்கள் அனைவரினதும் தலைவராக, அனைத்து மக்கள் மீதும் தாம் ஒருசேர அவதானத்தைச் செலுத்துவதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் நேற்று, ஜனாதிபதி அலுவலகத்தில் நடத்திய கலந்துரையாடலின்போதே ஜனாதிபதி

9

## கொழும்பில் ஐக்கிய தேசியக் கட்சி பெரும் சத்தியாக்கிரகப் போராட்டம்

### நாட்டை மீட்டெடுக்க தேசிய வேலைத்திட்டம் அவசியம் என வலியுறுத்து



தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலையிலிருந்து நாட்டை மீட்டெடுக்க தேசிய வேலைத்திட்டமொன்றை உருவாக்குமாறு வலியுறுத்தி ஐக்கிய தேசியக் கட்சியால் கொழும்பில் நேற்று மாபெரும் சத்தியாக்கிரகப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நடைபெற்ற இந்த அறவழிப்

9

EDUS Online School with GLOBAL STANDARDS

சிறந்த Online கல்விக்கான நிரந்தர தீர்வு..!!

English & Tamil Medium

அனைத்து பாடங்களுக்குமான ஒன்லைன் வகுப்புகள் எம்மிடமிருந்து.

தரம் 1 - 5 (Primary) தரம் 6 - 11 (Secondary) G.C.E A/L

Enroll Now

Admissions

www.edus.lk

0777 123 330

அனைத்து பெற்றோர் மாணவரினதும் நம்பிக்கைக்குரிய ஒன்லைன் கல்விச்சேவை..!

தமிழ் பேசும் மக்களின் தனித்துவக் குரல் The Distinctive Voice of The Tamil Speaking People

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...) என்பது வரை.

தமிழர் தரப்பில் எட்டுப் பேர், அரசு தரப்பிலும் பலர் பங்கு பற்றினர். ஆகவே அந்தப் பேச்சில் இடம்பெற்ற விடயங்கள் குறித்து நான் அதிகம் உள்வீட்டுத் தகவல்களை எழுதப் போவதில்லை. ஏற்கனவே பலரும் செய்தியாக்கிய விடயங்கள். அதனால் விட்டு விடுகிறேன்.

எனினும், இந்தப் பேச்சின் பின்னர் இடம்பெற்ற இரண்டு விடயங்களைக் குறிப்பிடலாம் என நினைக்கிறேன். இந்தப் பேச்சின் கனகாத்திரத்தை வெளிப்படுத்த அவை முக்கியம் என்று எண்ணுகிறேன்.

நேற்றைய பேச்சுக்கள் பிற்பகல் 1.30 மணியளவில் முடிவுற்றன. அது முடிந்து இரண்டு, மூன்று மணி நேரத்தின் பின்னர் இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வாவிடம் இருந்து கூட்டமைப்பின் பேச்சாளர் சுமந்திரனுக்கு ஓர் அழைப்பு வந்தது.

"படையினர் மக்களின் காணிகளை சுவீகரிக்கின்றார்கள் என்று ஜனாதிபதிக்கு முறைப்பாடு செய்துள்ளீர்கள். அப்படி எந்தக் காணியையும் சுவீகரிக்கக் கூடாது எனத் தாம் உத்தரவு வழங்கியிருக்கையில் அப்படி எங்கு சுவீகரிக்கின்றீர்கள் என்று ஜனாதிபதி என்னிடம் கேட்கின்றார். தயவு செய்து அந்த விவரங்களைத் தாருங்கள். உடன் கவனிக்கிறேன். அப்படி சுவீகரிப்பு முயற்சி ஏதும் நடக்காது. நடந்தால் உடன் எனக்குத் தகவல் தாருங்கள். நான் நடவடிக்கை எடுப்பேன். இப்போது எங்கெங்கு இப்படி சுவீகரிப்பு முயற்சி நடந்துள்ளன என்று விவரத்தைத் தாருங்கள். அப்படி நடக்காமல் நான் பார்த்துக் கொள்ளுகிறேன்." – என்ற சாரப்படக் கூறினாராம் இராணுவத் தளபதி.

"சற்றுப் பொறுங்கள். விவரங்களை அனுப்புகிறேன்." – என்று குறிப்பிட்ட சுமந்திரன், கையோடே விவரங்களை அனுப்பி வைத்தார் என்று அறிய வந்தது.

– இது முதல் விடயம்.

அடுத்தது – நேற்றைய பேச்சு முடிந்ததும், மூத்த தமிழ் ஊடகவியலாளர் ஒருவர் அந்த முயற்சியை பாராட்டி ஜனாதிபதி கோட்டாபயவுக்கு ஒரு குறுஞ் செய்தியை அனுப்பினார். சற்று நேரத்தில் அவருக்கு அதிர்ச்சி காத்திருந்தது.

அவரது தொலைபேசிக்கு அழைப்பு எடுத்தார் ஜனாதிபதி கோட்டாபய. வாழ்த்துக்கு முதலில் நன்றி கூறினார்.

"மதியம் பேச்சுக்குப் பின்னர் நீங்கள் தமிழ்க் கூட்டமைப்பினர் யாருடனாவது பேசினீர்களா? அவர்கள் என்ன கருத்தில் – மன நிலையில் – இருக்கின்றார்கள்?" – என்று கேட்டார் ஜனாதிபதி.

"ஆம், சுமந்திரனுடன் பேசினேன்." – என்று குறிப்பிட்ட அந்த மூத்த ஊடகவியலாளர் மேலும் விவரித்தார்.

"அவர்கள் பேச்சு மூலம் தீர்வு காண்பதில் முழு நம்பிக்கை வைத்துத்தான் பேச வந்தார்கள். மற்றவர்கள் எல்லாம் சர்வ கட்சிக் கூட்டத்தைப் பகிஷ்கரித்த போது அவர்கள் பேச வந்தமையே பேச்சின் மூலம் ஐக்கிய இலங்கைக்குள் ஒரு தீர்வு காண வேண்டும் என்பதற்குத்தான். பேச்சு மூலம் ஓர் இணக்கத்துக்கு வந்தீர்களானால் அதனை நடைமுறைப்படுத்தக் கூடிய வலிமையுள்ள தலைவர் நீங்கள் என்று எண்ணுகின்றார்கள். அந்த நம்பிக்கையை நிறைவு செய்யுங்கள்." – என்றார் ஊடகவியலாளர்.

"ஆமாம். நான் அதில் மிக உறுதியாக இருக்கிறேன். என்னை நம்பி வரும் போது நான் கைவிட மாட்டேன். என்ன எதிர்ப்பு வந்தாலும் இந்த முயற்சியை முன்நகர்த்துவதற்கு நான் பின்வாங்க மாட்டேன். அவர்களின் உடனடிப் பிரச்சினைகளுக்கு விரைந்து தீர்வு கொடுப்பதன் மூலம் நம்பிக்கையைக் கட்டி வளர்த்து, அதிலிருந்து அரசியல் தீர்வு முயற்சியை நாம் எட்டலாம். அவர்களுக்கும் யதார்த்தம் விளங்குகின்றது." – என்ற ஜனாதிபதி, புலம்பெயர் தமிழர்கள் பற்றியும் பிரஸ்தாபித்தார்.

"டயஸ்போறா என்று அவர்களை நாம் பிரித்துப் பேசக் கூடாது. அவர்களும் நம் மக்களே. ஆனால் தொழில் நுட்ப ரீதியில் அப்படி அவர்களைப் பிரித்து வைத்துப் பேசும் சூழ்நிலை ஏற்பட்டு விட்டது. அவர்களையும் அரவணைத்து, அவர்களுக்கும் இணக்கமான ஏற்பாடுகளை நாம் செய்ய வேண்டும்." – என்று ஜனாதிபதி குறிப்பிட்ட போது அந்த ஊடகவியலாளர் குறுக்கிட்டார்.

"ஆம், ஜனாதிபதி அவர்களே! அவர்களுக்கு (புலம் பெயர்ந்தவர்களுக்கு) முழு நம்பிக்கை ஏற்படும் விதத்தில் உங்கள் அரசின் நடவடிக்கைகள், செயற்பாடுகள் அமைய வேண்டும்." – என்று ஆலோசனை கூறினார் அந்த ஊடகவியலாளர்.

ஆமாம், அது குறித்து ஆராய்கிறேன் என்ற சாரப்பட பதிலளித்த ஜனாதிபதி, இப்போதைய சமரச முயற்சிகள் தொய்ந்து போகவோ, முறியவோ தாம் விடமாட்டார் என்று தமது வார்த்தை ஈளிநூடு அந்தச் செய்தியாளருக்குக் கோடி காட்டினார்.

இது நேற்று இடம்பெற்ற இரண்டாவது விடயம்.

ஜனாதிபதிக்கும் கூட்டமைப்பிற்கும் இடையில் நேற்று நடைபெற்ற பேச்சு என்ன திசையில் நகர்கின்றது, அதில் நம்பிக்கை வைக்கலாமா என்பவை குறித்து எனது கருத்து எதனையும் நான் இங்கு குறிப்பிடப் போவதில்லை.

ஆனால், மேற்படி இரண்டு சம்பவங்களும் முற்றிலும் உண்மை. இதிலிருந்து விடயங்களை – நிலைமைகளை – வாசகர்களே முடிவு செய்து கொள்ளட்டும் என்று விட்டு விடுகிறேன்.

– மின்னல் –

# மக்களின் அமோக ஆணையுடன் புதிய ஆட்சியமைத்தே தீருவோம்!

## சஜித் திட்டவட்டம்



நாட்டு மக்களின் அமோக ஆணையுடன் புதிய ஆட்சியமைத்தே தீருவோம் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்த நாட்டு மக்கள் சரியான நேரத்தில் உரிய முடிவை எடுப்பார்கள். நாட்டை மீட்பதற்கான ஆணையை எங்களுக்கு வழங்குவார்கள். எனவே, ஆட்சி மாற்றம் என்பது பகல் கனவு கிடையாது.

நாட்டில் இன்று உணவுப் பாதுகாப்பு இல்லை. வாழ்வதற்காகப் போராட வேண்டிய நிலைமையே உள்ளது.

ஜனாதிபதியின் சர்வகட்சி மாநாட்டின் பின்னணியில் சூழ்ச்சி உள்ளது. இதை விவசாயத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே ஏற்றுக்கொண்டுள்ளார் – என்றார்.

# புலிகளின் இலக்கை அடைய தமிழ்க் கூட்டமைப்பு முயற்சி!

## கம்மன்பில குற்றச்சாட்டு

பிரபாகரன் தலைமையிலான தமிழீழ விடுதலைப் புலிகளால் துப்பாக்கி மூலம் பெறமுடியாமல் போனதை, அரசியல் ஆயுதம் மூலம் பெறுவதற்கு இரா. சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முயற்சிக்கின்றது.

– இவ்வாறு புதிய ஹெல உறுமயவின் தலைவரும் முன்னாள் அமைச்சருமான உதய கம்மன்பில தெரிவித்தார்.

மகாநாயக்க தேரர்களை நேற்று முன்தினம் சந்தித்து ஆசிபெற்ற வேளையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சர்வகட்சி மாநாட்டில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பங்கேற்றதில் உள்நோக்கம் இருக்கின்றது.

தற்போதைய நெருக்கடி நிலைமையைப் பயன்படுத்தி தமது இலக்கை அடைவதற்குக் கூட்டமைப்பினர் முற்படுகின்றனர்.

அதாவது புலிகளால் துப்பாக்கி மூலம் பெறமுடியாமல் போனதை, அரசியல் ஆயுதம் மூலம் பெறக் கூட்டமைப்பினர் முற்படுகின்றனர்.

அனுமான் இலங்கையைத் தீயிட்டு அழித்தார் எனக் கூறப்படுகின்றது. அதுபோலவே அசிங்கமான அமெரிக்கரும் தற்போது நாட்டை அழித்து வருகின்றார். அரசுக்கான பெரும்பான்மையை இல்லாது செய்தால் அவர் அமெரிக்கா ஓடிவிடுவார் – என்றார்.

# தமிழர் மனதை வெல்லவே கோட்டாவின் பேச்சு நாடகம்

## ஐக்கிய மக்கள் சக்தி சாடல்

சிங்கள மக்களால் வெறுத்து ஒதுக்கப்பட்டு வரும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, தமிழ் மக்களின் மனதை வெல்லவும் சர்வதேச சமூகத்தைச் சமாளிக்கவுமே தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேச்சு நாடகத்தை அரங்கேற்றுகின்றார்.

– இவ்வாறு பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது.

கோட்டாபயவின் இந்த நாடகத் துக்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் துணைபோகக்கூடாது. அவர்கள் கடந்த காலச் சம்பவங்களை நினைவில் வைத்துக்கொண்டு நிதானமாகச் செயற் பட வேண்டும் எனவும் ஐக்கிய மக்கள் சக்தி சுட்டிக்காட் டியுள்ளது. பேச்சை மேசையைக் கூட்ட மைப்பினர் சரிவரப் பயன்படுத்த வேண்டும். அதைவிடுத்துக் கோட்டாபய அரசைக் காப்பாற்றும் வகையில் அவர்கள் செயற்படக்கூடாது எனவும் சஜித் அணி வலியுறுத்தியுள்ளது.

தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்க வேண்டும் என்பதில் ஐக்கிய மக்கள் சக்தி உறுதியாகவுள்ளது. ஆனால், தமிழர்களுக்குத் தீர்வை வழங்க

# மின் துண்டிப்பு நேரம் நீடிக்கப்படமாட்டாது!

## பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழு அறிவிப்பு

கொழும்பு, மார்ச் 26

அடுத்த வாரத்தில் மின் துண்டிப்பு நேரம் நீடிக்கப்படமாட்டாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழு இதனைத் தெரிவித்துள்ளது.

மின்னுற்பத்திக்குத் தேவையான எரிபொருளை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் தலைவர் நேற்று அறிவித்தார்.

இதையடுத்து அடுத்த வாரம் மின் துண்டிப்பு நேரம் நீடிக்கப்படமாட்டாது என இலங்கை பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

தற்போது ஆறரை மணித்தியாலங்களுக்கு அமுலாக்கப்படும் மின்தடை அடுத்த வாரத்தில் 10 மணித்தியாலங்களாக அதிகரிக்கும் என முன்னதாக அறிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 076 306 8091
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக
30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து
வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with
Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable
in Indian Style
DESSERT
ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## ஆரோக்கியமான நகர்வு

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தரப்புடன் தமிழ்க் கூட்டமைப்பின் பேச்சு, காலம் பிந்தித் தொடங்கினாலும் – 'லேட்'டாக வந்தாலும் லேட்டஸ்ட்'டாக வந்திருப்பது – நல்ல விடயமே.

பௌத்த – சிங்களப் பேரினவாதத்தில் துடித்துக் கொதித்துக் கொண்டிருந்த கோட்டா தரப்பு, அந்தத் தீவிரப் போக்குத் தரப்புகளிடமே பட்டுத் தெளிந்த பின்னர் பேச்சுக்கு வந்திருக்கின்றமை நல்ல அம்சம்தான்.

இந்தப் பேச்சில் – நேற்று ஆரம்பமான சமரச முயற்சியில் – ஆக்கபூர்வமான சில விடயங்கள் பொதிந்திருக்கின்றமை அவதானிக்கத் தக்கது.

அரசியல் பேச்சுக்களை எழுந்தமானமாக ஆரம்பித்து வெறுமனே காலத்தை இழுத்தடிப்பதில் அர்த்தமில்லை.

நல்லாட்சி அரசின் காலத்தில் தீர்வு விடயங்களையும் உள்ளடக்கிய ஓர் அரசமைப்பு நகலுக்கான யோசனைத் திட்டத்தை (கவனிக்கவும் 'அரசமைப்பு நகல்' அல்ல, 'அரசமைப்பு நகலுக்கான யோசனைத் திட்டத்தை') தயாரிக்கவே 90 மரதன் அமர்வுகளை நடத்த வேண்டியிருந்தது. 'மலையைக் கெல்லி எலியைப் பிடித்த கதையாக' அந்த நகலுக்கான யோசனைத் திட்டமும் வருடக் கணக்கான காலத்தை விழுங்கி ஏப்பமிட்ட பின்னர் பயனற்றுப் போனது.

ஆனால், இம்முறை – கோட்டா அரசுடனாக பேச்சின் ஆரம்பத்திலேயே – ஒரு நகல் யோசனைத் திட்டம் கறுப்பு – வெள்ளையில் ஆவணமாக இருக்கப் போகின்றது. புதிய அரசமைப்பு உருவாக்கத்துக்காக ஜனாதிபதி சட்டத்தரணி ரொமேஷ் டி சில்வா தலைமையில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நியமித்த நிபுணர் குழுவின் பரிந்துரை அறிக்கைதான் அது. அந்தப் பரிந்துரை மொழி பெயர்ப்புக்காகக் கொடுக்கப்பட்டிருக்கின்றது. இரண்டு மாதத்திற்குள் அது வரும், வந்ததும் அதனை அடிப்படையாக வைத்துக் கொண்டு அரசியல் தீர்வுக்கான பேச்சுக்களை ஆரம்பிக்கலாம் என்பது அரசுத் தரப்பின் சிபாரிசு. அதைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் ஏற்றுக் கொண்டது.

இந்த அரசமைப்பு உருவாக்க நிபுணர் குழுவுக்குத் தமிழ்க் கூட்டமைப்பும் தன் யோசனையைச் சமர்ப்பித்திருந்தது. அவை புதிய அரசமைப்பு நகலில் உள்வாங்கப்பட்டனவா, அந்த நகல் பேச்சுக்கான அடிப்படையாக அமையுமா என்பவை எல்லாம் அதன் வடிவம் பார்வைக்கு வந்த பின்னர்தான் முடிவு செய்யப்பட முடியும்.

அது குறித்துப் பேச முன்னர், தமிழ் மக்களின் உடனடி – அவசர – பிரச்சினைகள் குறித்துப் பேசவும், அவற்றுக்குத் தீர்வு கண்டு, அவற்றின் மீது அரசியல் தீர்வுக்கான பேச்சுக்களைக் கட்டமைக்கவும் தீர்மானிக்கப்பட்டிருக்கின்றமை முக்கிய விடயங்கள்தாம்.

காணி அபகரிப்புப் பிரச்சினைக்கு முற்றுப் புள்ளி, அரசியல் கைதிகளின் விடுதலை, காணாமலாக்கப்பட்டோர் விடயத்துக்கு நியாயத் தீர்வு, வடக்கு – கிழக்கு அபிவிருத்திக்கு உரிய ஏற்பாடு என்ற கட்டமைக்கப்பட்ட ஏற்பாடுகளின் மீது அரசியல் தீர்வு குறித்துப் பேசுவதும் –

அது குறித்து பேசுவதற்கான ஆவணம் ஒன்றை அரசே முன்மொழிவதும் –

இவ்விடயங்களை விரைவாக முன்னெடுத்துத் தீர்ப்பதற்கு இந்த ஆட்சிப் பீடத்துக்கு இன்னும் இரண்டரை ஆண்டுகளுக்கு மேற்பட்ட கால அவகாசம் இருப்பதும் –

இப்போதைய சமரச முயற்சிகளின் ஆரோக்கியமான அம்சங்கள். இவற்றைச் சரியாகப் பயன்படுத்திக் கொள்வது தமிழர் தரப்பின் கெட்டித்தனத்தில் தங்கியுள்ளது.

# தனி ரயிலை முழுமையாகப் பதிவுசெய்து சுற்றுலாவுக்கு வந்த ரஷ்ய கோடீஸ்வரர்!

## ஜனாதிபதி கோட்டாவுக்கு பேரதிர்ச்சி

உலகின் தலைசிறந்த கோடீஸ்வரர்கள் இலங்கைக்கு சுற்றுலா பயணம் மேற்கொண்டு வந்துள்ளனர் என சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

அந்த வகையில் இலங்கைக்கு வருகை தந்த ரஷ்ய கோடீஸ்வரர் ஒருவர் தனது குடும்பத்துக்காக முழு ரயிலையும் பதிவு செய்யப்பட்ட கொண்ட சம்பவம் இடம்பெற்றுள்ளது.

அண்மையில் இலங்கைக்கு வந்த ரஷ்ய நாட்டவர் ரயில் ஒன்றை முழுமையாக முன்பதிவு செய்து குடும்பத்துடன் மலையகத்துக்கு பயணித்துள்ளார்.

சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபைக்கு விஜயம் செய்த ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இந்த செய்தியை கேட்டு ஆச்சரியமடைந்துள்ளார்.

உலகெங்கிலும் உள்ள பணக்காரர்கள் இலங்கைக்கு வருகை தருகின்றார் என சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் கிமாலி பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

இலங்கையில் கொவிட் பயணக் கட்டுப்பாடுகள் நடைமுறையில் இருந்த காலப் பகுதியில் ரஷ்யாவின் பெரும் பணக்காரர் ஒருவர் நாட்டுக்கு வந்துள்ளார். அவர் தனது குடும்பத்தினர் சிலருடன் ரயிலில் மலையகத்துக்கு பயணம் செல்ல விரும்பினார்.

சமூகத்தினருடன் ஒன்றுபடுவது மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. இந்த நிலையில் பொதுப் போக்குவரத்துச் சேவையினால் அந்த கோரிக்கையை நிறைவேற்ற முடியாது எனத் தெரிவிக்கப்பட்டது. இதனால் தனது குடும்பத்திற்காக முழு ரயிலையும் முன்பதிவு செய்துவிட்டு ஹற்றன் மற்றும் எல்ல பகுதிக்கு பயணித்தார்.

கொவிட் பரிசோதனைக்காக தனக்கான தனியாக மருத்துவரையும் ரஷ்யாவில் இருந்து அழைத்து வந்துள்ளார். அதுமட்டு மன்றி, அவரது பிள்ளைகள் பியானோ வாசிப்பதால் அதனையும் கொண்டு வந் துள் ளார்.

அத்தகைய பணக்காரர்களும் இந்த நாட்டைப் பார்க்க வருகிறார்கள் என சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் கிமாலி பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் இவ்வாறு கூறியமையும் ஜனாதிபதியும் ஆச்சரியமடைந்துள்ளார் என செய்தி வெளியாகியுள்ளது.

# பொருளாதார நெருக்கடி தொடர்பில் உயர் நீதிமன்றத்தில் மனுத் தாக்கல்!

இலங்கை எதிர்நோக்கும் பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண அமைச்சரவைக்கு உத்தரவிடுமாறு கோரி உயர்நீதிமன்றில் அடிப்படை உரிமை மீறல் மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தால் நேற்று (வெள்ளிக்கிழமை) இந்த அடிப்படை உரிமை மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

# கோட்டாவின் செயற்பாடுகளால் இ.தொ.கா. கடும் அதிருப்தி ஜீவன் தொண்டமானுடன் தர்க்கத்தில் ஈடுபட்ட அமைச்சர்?



இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் தலைமையிலான இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மீதான நம்பிக்கையை இழந்துள்ளதாகக் கூறப்படுகின்றது.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் முக்கியஸ்தர் ஒருவரை மேற்கோள்காட்டி ஆங்கில ஊடகம் ஒன்று இது தொடர்பில் செய்தியை வெளியிட்டுள்ளது.

கடந்த வருடம் இரசாயன உர இறக்குமதியைத் தடைசெய்வதற்கு கட்சியால் கடும் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டதாகவும், ஜனாதிபதியின் தீர்மானம் தொடர்பில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் கடும் அதிருப்தியில் இருப்பதாகவும் அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வாரம் நடைபெற்ற அனைத்துக் கட்சி மாநாட்டை இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் புறக்கணித்தமைக்கான முக்கிய காரணங்களில் ஒன்று உரத்தடை தோட்டத் தொழிலாளர்கள் மத்தியில் ஏற்படுத்திய தாக்கமே எனவும் குறிப்பிடப்படுகின்றது.

அத்துடன், இலங்கை தொழிலாளர் காங்கிரஸும் ஜனாதிபதியால் எடுக்கப்பட்ட பல தீர்மானங்கள் தொடர்பாக அதிருப்தியில் இருப்பதாகவும் கூறப்படுகின்றது.

குறிப்பாக 'ஜனாதிபதி எங்கள் பேச்சைக் கேட்பதில்லை. நாங்கள் எங்கள் கவலைகளை பிரதமரிடம் தெரிவித்துள்ளோம் – என கட்சியின் முக்கிஸ்தர் ஒருவர் தெரிவித்துள்ளார் எனவும் கூறப்படுகின்றது.

இதேவேளை, சர்வக் கட்சி மாநாட்டை புறக்கணித்தமை தொடர்பாக அரசாங்கத்தின் இரண்டு முக்கியஸ்தர்கள், இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமானுடன் தர்க்கத்தில் ஈடுபட்டுள்ளனர் எனவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

நாடாளுமன்ற உணவகத்தில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளதாகக் கூறப்படுகின்ற போதிலும், அதனை உறுதிப்படுத்த முடியவில்லை.

அரசாங்கத்தின் அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர் ஒருவரும் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரும் இந்த விடயத்தில் சம்பந்தப்பட்டுள்ளனர் எனக் கூறப்படுகிறது.

அரசாங்கத்தில் அமைச்சராக பதவி வகித்து கொண்டு, சர்வக் கட்சி மாநாட்டை புறக்கணித்ததை ஏற்றுக்கொள்ள முடியாது எனவும் அப்படி செய்ய வேண்டுமாயின் அமைச்சர் பதவியில் இருந்து விலகி விட்டு அதனைச் செய்ய வேண்டும் என அந்த அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர் ஜீவன் தொண்டமானிடம் கூறியுள்ளார்.

இதன்போது, பதிலளித்துள்ள ஜீவன் தொண்டமான், அமைச்சராக பதவி வகித்து கொண்டு அரசாங்கத்தை விமர்சிப்பதா இல்லையா என்பது தொடர்பான தீர்மானத்தை எடுப்பது தான் எனவும், அரசாங்கத்தில் அங்கம் வகிப்பதா இல்லையா என்பதை கட்சி முடிவு செய்யும் எனவும் கூறியுள்ளார் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

# மரண அறிவித்தல்

மண்ணில் மலர்வு

04

03

1943



விண்ணில் உதிர்வு

24

03

2022

## திருமதி. சரோஜினிதேவி இராஜரட்ணம்

யாழ்ப்பாணம் கோண்டாவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் கொழும்பு வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த திருமதி சரோஜினிதேவி அவர்கள் 24.03.2022 வியாழக்கிழமையன்று சிவபதம் அடைந்தார். இவர் ( வடகோவை பூ.க. இராஜரட்ணம் ஓய்வுநிலை அதிபர், கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரி ) அவர்களின் அன்பு மனைவியும் மற்றும் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் ஆச்சிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும் பரமேஸ்வரி காலஞ்சென்ற பூமணி இராசமணி ஜெயக்குமார் ஆகியோரின் சகோதரியும் காலஞ்சென்றவர்களான கந்தப்பு சின்னம்மா ஆகியோரின் அன்பு மருமகளும் கலாநிதி பிரேம்ராஜ் (அவுஸ்திரேலியா), சசிகலா (லண்டன்), உதயராஜ் (லண்டன்),மேகலா (லண்டன்) ஆகியோரின் அன்பு தாயாரும் நாராயணி ஸ்ரீதரன் ஹேனுஷியா திருநாவுக்கரசு ஆகியோரின் அன்பு மாமியாரும் லவின்ராஜ், அஸ்வின்ராஜ், ஜசின்ராஜ், சரண்ராஜ், பிரவீன்ராஜ் ஆகியோரின் பாசமிகு அப்பம்மாவும் திலக்சன், பிரித்திகா, ஐக்சனா, மதுஷனா ஆகியோரின் பாசமிகு அம்மம்மாவுமாவார். அன்னாரின் பூதவுடல் அஞ்சலிக்காக 26.03.2022 சனிக்கிழமை அன்று பொரளை ஜெயரட்ண மலர்ச்சாலையில் காலை 9.00 மணிமுதல் மாலை 4.30 மணிவரை அஞ்சலிக்காக வைக்கப்பட்டு 27.03.2022 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணி முதல் கிரியைகள் நடைபெற்று 11 மணியளவில் பொரளை இந்து மயானத்தில் தகனக்கிரியைகள் இடம்பெறும் இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி அன்புடன் வேண்டிக்கொள்கின்றோம்.

**தகவல்**

**வடகோவை, பூ.க. இராஜரட்ணம் - கணவர் - 0112582531, 0779625405**
**பிரேம்ராஜ் (மகன்) 0061478005488, சசிகலா (மகள்) 00447784384796**
**உதயராஜ் (மகன்) 00447710412485, மேகலா (மகள்) 00447908603770**

**முகவரி : 36/2A, 37 வது ஒழுங்கை, வெள்ளவத்தை,கொழும்பு-06**

## ஐ.தே.க. எம்முடன் இணைவதே சிறந்தது!

சஜித் அணி பகிரங்க அறிவிப்பு



ஐக்கிய தேசியக் கட்சியில் ஒருவர்தான் இருக்கின்றார். அந்தக் கட்சியால் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்த முடியாது. எனவே, அந்தக் கட்சியில் உள்ள அரசியல் பிரமுகர்கள் எம்முடன் இணைவதே மேலானது என ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்துமபண்டார எம்.பி. தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியவை வருமாறு –

ஐக்கிய தேசியக் கட்சி என்பது எமது தாய்க்கட்சி. அந்தக் கட்சியின் ஆதரவாளர்கள் எம்முடன்தான் இருக்கின்றனர். அந்தக் கட்சியை நாம் மறக்கமாட்டோம். ஆனால், அந்தக் கட்சியின் அரசியல் கட்டமைப்பில் தற்போது ஒருவர்தான் இருக்கின்றார்.

எனவே, அந்தக் கட்டமைப்பால் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்த முடியாது. எம்மால் தான் அது முடியும். எனவே, எம்முடன் கூட்டணி அமைப்பதுதான் ஆரோக்கியமான விடயமாக அமையும். – என்றார்.

## சஜித் தரப்பின் மே தினம் இந்த முறை கண்டியில்

மே தின கூட்டத்தையும், பேரணியையும் கண்டியில் நடத்துவதற்கு ஐக்கிய மக்கள் சக்தி தீர்மானித்துள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தியின் மத்திய செயற்குழுக் கூட்டம் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையில் வியாழக்கிழமை நடைபெற்றது.

இதன்போதே இந்தத் தீர்மானம் எட்டப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

## ஒன்று எரிபொருள் கப்பல்கள் வருகை

கொழும்பு துறைமுகத்திற்கு அருகில் 12 நாள்களாக நங்கூரமிட்டிருந்த டீசல் ஏற்றி வந்த கப்பலுக்கான பணம் செலுத்தப்பட்டதாக எரிசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

டொலர் தட்டுப்பாடு காரணமாக 20 ஆயிரம் மெற்றிக் தொன் டீசலை ஏற்றி வந்த கப்பல் சுமார் 12 நாள்களாக கொழும்பு துறைமுகத்துக்கு அருகில் நங்கூரமிட்டிருந்தது.

கப்பலின் உரிமையாளரான சிங்கப்பூர் நிறுவனத்துக்கு 4 கோடியே 20 லட்சம் அமெரிக்க டொலர்களை செலுத்தப்பட்டதை அடுத்து டீசலை இறக்கும் பணி நேற்று ஆரம்பிக்கப்பட்டது என எரிசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

35 ஆயிரம் மெற்றிக் தொன் பெற்றோலை ஏற்றிக்கொண்டு மற்றுமொரு கப்பல் நாட்டை வந்தடைந்துள்ளதாக அமைச்சின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

குறித்த பெற்றோல் தொகை இந்தியக் கடன் வசதியின் கீழ் பெறப்பட்டது.

# போலியான ஆவணங்கள் தயாரித்து அரசஈட்டு முதலீட்டு வங்கியில் கடன்!

## கோப் குழுவில் வெளியான பகீர் தகவல்

போலியான ஆவணங்களைத் தயாரித்தும், போலியான தகவல்களை முன்வைத்தும் 47 பேர் 2017 ஆம் ஆண்டில் அரச ஈட்டு முதலீட்டு வங்கியில் 6 கோடியே 80 லட்சம் ரூபா கடன்களைப் பெற்றுக் கொண்டமை அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவில் (கோப் குழுவில்) புலப்பட்டது.

கடன் பெற்றவர்கள் என அடையாளம் காணப்பட்டவர்களுக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டிருப்பதுடன், இது தொடர்பில் இன்னமும் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தால் விசாரணைகள் நடத்தப்பட்டு வருகின்றன எனவும் குழுவிற்குச் சமூகமளித்திருந்த அதிகாரிகள் தெரிவித்தனர். குறிப்பாக இது தொடர்பில் பணியாளர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதுடன், விசாரணைகள் பூர்த்தி செய்யப்பட்ட நபர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகவும் அதிகாரிகள் சுட்டிக்காட்டினர்.

அத்துடன், இதனுடன் தொடர்புபட்ட வெளிநபர்கள் இருவர் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தால் கைது செய்யப்பட்டனர் எனவும், இதில் ஒருவர் உயிரிழந்திருக்கிறார் எனவும் அதிகாரிகள் தெரிவித்தனர். குறிப்பாக புதிய தலைவர் மற்றும் பணிப்பாளர் சபை நியமிக்கப்பட்ட பின்னர் மேற்படி கடனை மீள வசூலிப்பதற்கான நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்பட்டிருக்கின்றன எனவும் இங்கு தெரிவிக்கப்பட்டது. இந்த விடயம் தொடர்பில் உரிய நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்லுமாறு கோப் குழுவின் தலைவர் அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்தார்.

அரச ஈட்டு முதலீட்டு வங்கியின் 2017 மற்றும் 2018 நிதி ஆண்டுகளுக்கான கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை மற்றும் தற்போதைய செயலாற்றுகை தொடர்பாக ஆராயும் நோக்கில் அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழு அதன் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் சரித ஹேரத் தலைமையில் கூடியபோதே இந்த விடயங்கள் வெளிக்கொணரப்பட்டன. அதேநேரம், இவ்வருடங்களில் வீட்டுக் கடன்கள் அதிகம் வழங்கப்பட்டமை தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டதுடன், கைத்தொழில் மற்றும் விவசாயத்துக்கு வழங்கப்படும் கடன்கள் அதிகரிக்கப்பட வேண்டும் என இங்கு சமூகமளித்திருந்த குழுவின் உறுப்பினர்கள் தெரிவித்தனர். அரச ஈட்டு முதலீட்டு வங்கியின் நோக்கம் இதுவே என்றும் அவர்கள் சுட்டிக்காட்டினர். இது தொடர்பில் கவனம் செலுத்தி சிறிய தொழில்முயற்சிகள் பலருக்கு ஏற்கனவே கடன் வழங்கப்பட்டிருப்பதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்த வங்கியில் தற்பொழுது காணப்படும் வெற்றிடங்களைப் பூர்த்தி செய்வது தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டதுடன், நிறைவேற்றுத் தரத்தில் காணப்படும் வெற்றிடங்களைப் பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளபோதும், சில நிறைவேற்றுத்தர பதவிகளுக்கு பொருத்தமான விண்ணப்பதாரிகள் விண்ணப்பிப்பதில்லையென்றும், ஒரு சிலர் நியமனங்களைப் பெற்று சிறிது காலத்தில் விலகிச் செல்கின்றனர் எனவும் அதிகாரிகள் தெரிவித்தனர். இந்தப் பதவிகளுக்கான சம்பளம் போதுமானதாக இல்லையாயின் அதில்திருத்தங்களைக்கொண்டுவந்துவெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்குமாறு கோப் குழுவின் தலைவர் ஆலோசனை வழங்கினார்.

அரச ஈட்டு முதலீட்டு வங்கி 30 வருடங்களாக வாடகைக்குப் பெற்றுக்கொள்ளப்பட்ட கட்டடத்தில் இயங்கி வருகின்றமை தொடர்பாகவும் இங்கு கலந்துரையாடப்பட்டது. தானியங்கி வங்கி அமைப்பை அமைப்பதற்கான நடவடிக்கைகள் தொடர்பும் இங்கு கவனம் செலுத்தப்பட்டன.

# வீடுகளில் பெற்றோல் சேமித்து வைத்திருப்பது ஆபத்தானது!

## சுகாதாரத்துறை எச்சரிக்கை

தற்போது நிலவும் எரிபொருள் நெருக்கடியுடன் வீடுகளில் பெற்றோலை சேமித்து வைப்பதால் விபத்துக்கள் ஏற்படுகின்றன என சுகாதார அதிகாரிகள் சுட்டிக் காட்டுகின்றனர்.

வீடுகளில் பெற்றோலை சேமித்து வைப்பது மிகவும் ஆபத்தானது என்று கொழும்பு தேசிய வைத்தியசாலையின் பிளாஸ்டிக் சத்திரசிகிச்சை விசேட வைத்திய நிபுணர் கயான் முனசிங்க குறிப்பிட்டுள்ளார்.

சுகாதார மேம்பாட்டுப் பணியகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இந்த நாட்களில் பெற்றோல் போன்ற எரிபொருள்களால் ஏற்படுகின்ற தீச் சம்பவங்கள் காரணமாக, கொழும்பு தேசிய வைத்தியசாலையில் இரண்டு நாட்களுக்கு ஒருவர் என்ற வீதத்தில் உயிரிழக்கின்றார் எனவும், நாளாந்தம் 4 முதல் 6 வரையான விபத்துக்கள் பதிவாகி வருகின்றன எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# திருமலையில் பரவலாக எரிவாயுவுக்கு தட்டுப்பாடு!

திருகோணமலை மாவட்டத்தில் பெரும்பாலான பிரதேசங்களில் சமையல் எரிவாயு சிலிண்டர்களுக்கு தொடர்ந்தும் தட்டுப்பாடு நிலவி வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அந்தவகையில் திருகோணமலை நகருக்கு அண்மையாக உள்ள சாம்பல் தீவு சந்தியில் சுமார் 400 இற்கும் மேற்பட்ட வெற்று சிலிண்டர்களுடன் நடுவீதியில் நேற்று (வெள்ளிக்கிழமை) அதிகாலை ஒரு மணி முதல் சமையல் எரிவாயு கொள்வனவிற்காக நீண்ட வரிசையில் காத்திருக்கிறோம் என வாடிக்கையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்நிலையில் குறித்த விநியோகஸ்தர்களுக்கு வழங்கப்படும் சமையல் எரிவாயு சிலிண்டர்களின் ஒரு தொகுதி திருகோணமலை மீன்பிடி துறைமுகத்துக்கு அனுப்புவதாகவும் மிகுதி இருக்கும் சமையல் எரிவாயு சிலிண்டர்களில் உணவகங்களுக்கு ஒதுக்கியதன் பின்னர் வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்படுவதாகவும் அவ்வாறு வழங்கப்படும் சமையல் எரிவாயு சிலிண்டர்கள் போதுமானதாக இல்லை எனவும் வாடிக்கையாளர்கள் குற்றம் சுமத்துகின்றனர்.

இறக்குமதி செய்யப்பட்டு திருகோணமலைக்கு என ஒதுக்கப்படும் சிலிண்டர்கள் அனைத்தும் அவ்விடத்தில் வைத்து தினம் தினம் பகிர்ந்தளிக்கப்படும் என விநியோகம் செய்பவர்கள் தெரிவித்த அதேவேளை பெரும் சிரமங்களுக்கு மத்தியில் பொதுமக்கள் நீண்ட வரிசைகளில் காத்திருந்து எரிவாயு சிலிண்டர்களை பெற்றுச்செல்கின்றமையை அவதானிக்கக் கூடியதாக இருக்கிறது.

# இலங்கைத் தேயிலைக்கான கேள்வி ரஷ்யாவில் இதுவரை குறையவில்லை!

ரஷ்யாவில் இலங்கை தேயிலைக்கான கேள்வி உள்ளபோதிலும் அதனை ஏற்றுமதி செய்வதில் இலங்கை நெருக்கடியில் உள்ளதாக இலங்கை தேயிலை சபை தெரிவித்துள்ளது.

ரஷ்யா மற்றும் உக்ரைனுக்கு இடையிலான யுத்தம் இடம்பெற்ற போதிலும் இலங்கை தேயிலைக்கான கேள்வி குறையவில்லை என இலங்கை தேயிலை சபை தெரிவித்துள்ளது. மாற்று வழிகளை பயன்படுத்தி சிரமங்களுக்கு மத்தியில் இலங்கை, ரஷ்யாவிற்கு தேயிலையை ஏற்றுமதி செய்வதாக தேயிலை சபை தலைவர் ஜயம்பதி மொல்லிகொட தெரிவித்துள்ளார்.

ரஷ்யாவிற்கு ஏற்றுமதி செய்யப்படும் தேயிலைக்கான பணத்தைப் பெற்றுக் கொள்வதற்கு மாற்று வழிகளைக் கடைப்பிடிக்க வேண்டியுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# ஹாலிஎல வீதியின் குறுக்கே உருண்டு சென்றது ஓட்டோ

ஹாலிஎல பிரதேச செயலகத்துக்கு முன்பாக இடம்பெற்ற விபத்து சி.சி.ரி.வி கமராவில் பதிவாகியுள்ளது.

ஓட்டோ ஒன்று வீதியின் குறுக்கே உருண்டு செல்வதை அந்தக் காணொலியில் காண முடிந்தது.

இந்த விபத்து புதன்கிழமை இரவு இடம்பெற்றுள்ளதுடன், ஓட்டோவின் சாரதி சிறு காயங்களுடன் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இலங்கையின் முக்கிய இராஜதந்திரி ஒருவர் மீது பாலியல் குற்றச்சாட்டு!

இலங்கையின் முக்கிய இராஜதந்திரி ஒருவர் மீது பாலியல் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது.

மேற்குலக நாடு ஒன்றின் கொன்சோல் ஜெனரலாகக் கடமையாற்றி வரும் பலம்பொருந்திய இராஜதந்திரி ஒருவருக்கு எதிராகவே இவ்வாறு குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

கடந்த அரசாங்க ஆட்சியில் தொடர்பாடல் விவகாரங்களுக்கு இந்த இராஜதந்திரி பொறுப்பாக இருந்தார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இராஜதந்திர அலுவலகத்தில் கடமையாற்றிய பெண் பணியாளர்கள் இந்த பாலியல் குற்றச்சாட்டை சுமத்தியுள்ளனர்.

மேற்படி இராஜதந்திரி ஒரு மிருகம் எனப் பெண் பணியாளர் ஒருவர் குற்றம் சுமத்தியுள்ளார். பணியாளர்களை மிக இழிவாகத் திட்டுகிறார் எனவும் தரக்குறைவாக நடாத்துகிறார் எனவும் அவர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

மேற்குலக நாட்டின் ஊடாகவும் இராஜதந்திரிக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கும் முனைப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என ஆங்கில ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இந்த குற்றச்சாட்டு தொடர்பில் அரசாங்கத் தரப்பில் அதிகாரபூர்வமாக எவ்விதப் பதிலும் இதுவரையில் வழங்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# கெரவலப்பிட்டி மின் உற்பத்தி நிலைய பணிகள் தற்காலிகமாக இடைநிறுத்தம்



கெரவலப்பிட்டி மின் உற்பத்தி நிலையத்தின் பணிகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளன.

எரிபொருள் தட்டுப்பாடு காரணமாகவே இந்த நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

சில நாட்களுக்கு முன்னர் சப்புகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையமும் தேவையான மசகு எண்ணெய் இன்மையால் மூடப்பட்டுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

'கம்பவாரிதி' இலங்கை ஜெயராஜ் தமது 'உகரம்' இணையத்தளத்தில் 'பாட்டும் நானே! பாவமும் நானே!' என்ற தலைப்பில் வாராந்தம் வரையும் கேள்வி - பதில் பகுதி 'காலைக்கதிர்' நாளிதழில் ஒவ்வொரு வாரமும் வெளியாகி வாசகர்களின் அறிவுக்குத் தீனியாகிறது.

# பாட்டும் நானே? பாவமும் நானே!




**கேள்வி:-** டான் ரி.வி 'ஸ்பொட் லைற்'றில் வெளியாகியிருக்கும் சுமந்திரனின் புதிய பேட்டியைக் கேட்டீர்களா?

**பதில் :-** கேட்டேன். சுமந்திரன் மீண்டும் ஒருதரம் தன் தகுதியை நிரூபித்திருக்கிறார். பேட்டி எடுத்த இளைஞர்களும்தான்.

**உலகநாதரின் ஒப்பீனியன் * வாரிதியார் பிடிக்கும் கொடி வர வர உயர்ந்து கொண்டே போகிறது. அப்படி என்னதான் ஈர்ப்போ?**

**கேள்வி:-** அண்மையில் நீங்கள் வாசித்து வியந்த ஒரு நூல் பற்றிச் சொல்லுங்களேன்.

**பதில் :-** 'தெய்வமாகிய என் குருவிற்கு' எனும் ஒரு சிறிய நூல் தற்செயலாய் என் பார்வைக்கு வந்தது. கலாநிதி க. குணராசா (செங்கை ஆழியான்) அவர்களின் நினைவாக நயினை கிருபானந்தா என்பவர் அந்நூலை எழுதியிருந்தார். கடித முறையில் எழுதப்பட்டிருந்த அந்நூலை யாழ்.இலக்கிய வட்டம் வெளியிட்டிருந்தது. சிறிய கல்வெட்டு 'சைசிலில்' இருந்த அந்த நூல் முதலில் என் கவனம் ஈர்க்கவில்லை. ஏதோ ஒரு பொழுது போகாத நேரத்தில் ஓரிரண்டு பக்கங்களைத் தட்டினேன். கையில் எடுத்த நூலைக் கீழே வைக்க முடியவில்லை. 'வியந்து போனேன்'



என்ற வார்த்தைகள் கூட என் உணர்வைப் பிரதிபலிக்கப் போதாதென்றே நினைக்கிறேன்.

நயினை கிருபானந்தா எங்களது யாழ்ப்பாணக் கம்பன் கழகத்தின் பொருளாளர். ஓர் தமிழ் ஆசிரியர். நல்லூர் முருகனிலும், நயினை நாகபூசணி அம்மனிலும் எல்லையற்ற பக்தி பூண்டவர். ஒவ்வொரு நாளும் அதிகாலையில் எழுந்து, பூக்கள் பறித்து, இந்த இரண்டு கோயில்களுக்கும் கொடுப்பதைத் தன் வாழ்நாள் கடமையாய்ச் செய்து வருபவர். தெரிந்தவர், தெரியாதவர் எனப் பேதம் பாராது காணும் அனைவரையும் வீட்டுக்கு அழைத்துச் சென்று விருந்திடும் இக்கால 'இளையான்குடிமாற நாயனார்.' கொஞ்சம் பழமைவாதி. இவைதான் கிருபானந்தா பற்றி என் மனப் பெட்டகத்தில் இருந்த செய்திகள்.

இந்த நூலைப் படித்ததும் திடீரென கிருபானந்தா என் மனப்பெட்டகத்தை உடைத்துக் கொண்டு விஸ்வரூபம் எடுத்துவிட்டார். மதிமயங்கிப் போனேன். இத்தனை ஆற்றலும் இந்த எளிய வடிவுக்குள் அடங்கியிருந்ததா? எனும் பிரமிப்பு உண்டாயிற்று. தோலைப் பார்த்து பழத்தின் சுவையை முடிவு செய்யாதே எனப் பெரியோர்கள் சொல்வதன் உண்மை புரிந்தது. தத்துவமாய், சிந்தனையாய், கவித்துவமாய், மானுடமாய் அவர் எழுத்தில் காட்டியிருந்த வித்துவங்கள், 'ஒரே பார்வையில் எவரையும் என்னால் எடைபோட முடியும்' எனும் என் செருக்கிற்கு 'ஆப்பு' வைத்தன. ஓர் ஆழச் சிந்தனையாளனை, ஓர் அற்புத எழுத்தாளனை இதுநாள் வரை இனங்காணாமல் இருந்துவிட்டோமே எனும் நாணம் உண்டாயிற்று.

உங்களில் சிலபேர் தன் கழக உறுப்பினனை உயர்த்துவதற்காக இவர் 'புழுகுகிறார்' என்று நினைப்பீர்கள். என்னைத் தெரிந்தவர்களுக்கு நான் அப்படிச் செய்யமாட்டேன் என்பது தெரியும். எனது முன்மொழிதலில் ஐயம் இருக்கிறவர்கள் கிருபானந்தாவிடம் அந்த நூலை வாங்கிப் படித்துப் பாருங்கள். அப்போது உங்களுக்கு நான் எழுதியவையின் 'போதாமை' தெரியவரும். செங்கை ஆழியான் கொடுத்து வைத்தவர். இப்படி ஒரு மாணவன் என் மறைவுக்குப் பின் என்னைப் பற்றி எழுதமாட்டானா? என ஏக்கம் உண்டாகிறது.

உங்கள் பார்வைக்கு ஒரு சோற்றுப்பதச் சுவைக்காக அந்நூலிலிருக்கும் சில வரிகளைத் தருகிறேன்.

* நீ இல்லை என்றால் இந்தக் கிராமத்துக் கலப்பை வானத்தை உழுது பார்க்க வசதி இருந்திருக்காது. இந்தத் தடி வேர் விட்டிருக்காது.

* மீசை முளைப்பதற்கு முன்பே நரைத்தவனுக்கு உரிய துயரம் என் தோள்களில் இருந்தது.

* குடும்பத்தில் படித்தவர்கள் என்று விரல்விட்டு எண்ணினால், விரல்கள்தான் மிஞ்சும்.

* குமிழிகளைக் கோர்த்துக் கோர்த்து முத்தாரம் செய்ய ஆசைப்படும் முட்டாளைப் போல உங்கள் எழுத் தைப் போல் எழுத முயன்று ஒவ்வொரு முறையும் வழுக்கி விழுந்து, என்னையும் என் எழுத்தையும் அவமானப்படுத்தினேன்.

**உலகநாதரின் ஒப்பீனியன் * மற்றவர்களைத் திட்டுவதையே தொழிலாய்க் கொண்டிருக்கும் வாரிதியாரிடமிருந்து இப்படி ஒரு பாராட்டா? 'வெல்டன்' கிருபானந்தா.**

**கேள்வி:-** ஜனாதிபதி கூட்டியிருக்கும் சர்வகட்சி மாநாடு பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

**பதில் :-** பல்லக்கைத் தனியே தூக்க விரும்பியவர் பாடையைத் தூக்கப் பலரையும் அழைக்கிறார். 'கண்கெட்ட பின் சூரியநமஸ்காரம்.'

**உலகநாதரின் ஒப்பீனியன் * 'கைகொட்டிச் சிரிப்பார்கள், ஊரார் சிரிப்பார்கள்.'**

கேள்வி: - முன்னாள் முதலமைச்சர் இப்போதெல்லாம் தன் இஷ்டப்படி முடிவுகளை எடுக்கிறார் என அவர் கட்சியின் செயலாளர் அருந்தவபாலன் குறை கூறி இருக்கும் செய்தியை 'ஈழநாட்டில்' பார்த்தீர்களா?

பதில் : - நான் நெருப்புச் சுடும், சுடும் என்று தலை தலையாய் அடித்தேன். அப்போது என்னைப் பகையாய்க் கருதினார். சொல்லச் சொல்லக் கேட்காமல் அதில் கைவைத்துவிட்டு அவரே இப்போது சுடுகிறது என்கிறார். கெட்டபின் ஞானம் வந்திருக்கிறது. இப்போது, இவரைச் சகிப்பதை விட அவர்களைச் சகித்திருக்கலாம் என நினைப்பார் எனக் கருதுகிறேன்.

**உலகநாதரின் ஒப்பீனியன் * பிழையான முடிவு பற்றிய சரியான அபிப்பிராயம். ஹி...ஹி..**

**கேள்வி:-** நாடு போகும் போக்கைப் பார்த்து, இது இன்னொரு எதியோப்பியாவாக மாறிவிடும் என்று பலரும் சொல்கிறார்கள். உலக ஊடகங்கள் எல்லாம் கூட ரஷ்ய, உக்ரேன் யுத்தத்திற்குச் சமமாக இலங்கைப் பிரச்சினை பற்றிச் செய்திகள் வெளியிடுகின்றன. என்னாகப் போகிறது நம்நாடு? யார் பிழையால் இது நிகழ்ந்தது? இன்றைய நிலையில் மக்கள் என்ன செய்ய வேண்டும்?

**பதில் :-** உண்மையில் இன்றைக்கு நாட்டிற்கு ஏற்பட்டிருக்கும் பொருளாதாரப் பின்னடைவு மிக மோசமானதுதான். எல்லோரும் வெகு எளிதாக எதியோப்பியாவாக இந்நாடு மாறப்போகிறது என்கிறார்கள். எதியோப்பியாவில் ஏற்பட்ட பஞ்சத்தின் கொடுமை தெரிந்தால் அந்த வார்த்தையைச் சொல்லமாட்டார்கள்!

எங்களில் பலருக்கு இரண்டு நேர உணவுகளுக் கிடையில் ஏற்படும் பசி பற்றித்தான் தெரியும். எப்பொழுது உணவு கிடைக்குமோ? எனும் அச்சத்தோடு கூடிய பசியை நாங்கள் அறியவில்லை. இப் பசியைத்தான் வள்ளுவர் அழிபசி என்கிறார்.

அத்தகைய பசிதான் எதியோப்பிய மக்களுக்கு ஏற்பட்டது. உணவு கிடைக்காமல் அவர்கள் வறுமையில் வாடித்துவண்ட கதை நினைத்தும் பார்க்கமுடியாதது. இது தெரியாததால்தான், இலங்கை எதியோப்பியாவாகப் போகிறது என்று சொல்லி வயிற்றில் புளியைக் கரைக்கிறார்கள்.

போகிற போக்கைப் பார்த்தால், ஏற்பட்டிருக்கும் வீழ்ச்சியிலிருந்து இலங்கை மீண்டு வருவதற்கான வழி ஏதும் இருப்பதாய்த் தெரியவில்லை. அரசு கடன்பட்டுக் கடன் அடைக்கும் முயற்சியிலேயே ஈடுபட்டு வருகிறது. அதற்கே அது நாட்டின் இறையாண்மையைப் பலி கொடுக்கத் தொடங்கியிருக்கிறது. இவர்கள் செய்வது நாட்டின் வீழ்ச்சிக்கான தற்காலிக வைத்தியம்தான். கண்ணுக்குக்கண் என்பது சரிவந்தாலும், கடனுக்குக் கடன் என்பது ஒருநாளும் சரிவராது. கடன் அடைக்கக் கடன் எடுத்து மக்களுக்கு 'கானல்நீர்' நிம்மதியைக் காட்டலாமே தவிர, நிரந்தர நிம்மதியை ஒருநாளும் கொண்டு வர முடியாது. இந்நிலையில் ஒட்டுமொத்த இலங்கையர்களும் பாதாள நரகம் நோக்கி நாளாந்தம் வேகமாய்ப் பயணித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதுதான் உண்மை.

இதற்கு யாரைக் குற்றம் சாட்டுவது என்ற கேள்விக்கு விடை காண்பதல்ல இன்றைய வேலை. இன்றைய அரசு பல பெருந்தவறுகளைச் செய்துவிட்டது. அதைக் கண்டுபிடிக்கும் முயற்சி என்பது கைப்புண்ணுக்குக் கண்ணாடி தேடுகிற வேலைதான். இன்றைய நிலையில் குற்றத்திற்கான காரணர்களைத் தேடுவதைவிட காரணத்தைத் தேடுவதுதான் அவசியம் என்று படுகிறது. இந்நிலைமைக்கு யார் காரணமாய் இருந்தாலும், நாட்டு மக்கள் அனைவரும் பாதிக்கப்படப் போகிறோம் என்பது மட்டும் உண்மை.

நாடு கடன்பட்டிருக்கிறது என்றால், அதற்கு நாம் எல்லோரும் கடன்பட்டிருக்கிறோம் என்றுதான் அர்த்தம். இந் நிலையில் இந்தப் பெரும் இடரிலிருந்து தப்புவதற்கான வழியைத் தேடுவது அரசின் கடமை மட்டுமன்று, மக்களின் கடமையுமாம். எமக்கென்று தனிக்கடன் வந்தால், எப்படி எம் தேவைகளைச் சுருக்கிக் கொண்டு அக்கடனை அடைக்க முயல்வோமோ, அதேபோல நாட்டின் இன்றைய இடரை நீக்க, நாம் அனைவரும் முதலில் நம் தேவைகளைச் சுருக்கிக் கொள்ளப் பழக வேண்டும்.

இரண்டாவதாக ஒவ்வொருவரும் ஏதோ ஒரு வகையில் தம்மாலான வரவை நாட்டிற்கு உருவாக்க முயல வேண்டும். நடந்துகொண்டிருப்பது நமது வீழ்ச்சி. இதில் அவன் வீழ்ந்தான் இவன் வீழ்ந்தான் எனக் கொண்டாடுவதற்கு இடமில்லை. அரசியலாளர்கள் வேண்டுமானால் அப்படிச் செய்யலாம். பொதுமக்களும் அப்படிச் செய்வது பொருத்தமான விடயமாகாது. யார் குற்றம்? என்றும், யாரைத் தண்டிப்பது? என்றும் பிறகு சிந்திக்கலாம். முதலில் அனைவரையும் சுடப்போகும் இந்த அக்கினிக் குண்டத்தை அணைக்கத் தம்மாலான ஒரு கை நீரையாவது ஊற்ற மக்கள் முன்வர வேண்டும்.

இன்றைய அரசு கவிழ்ந்தால், வரப்போகும் நாளைய புது அரசு அனைத்தையும் நேராக்கிவிடும் என்பது வெறும் கற்பனையே. பெரும் நீர்ச்சுழியில் அகப்பட்டிருக்கிறோம். இந்நிலையில் ஒன்றுபடாமல் பிரிந்து நின்றோமானால் அனைவரும் தாழப்போகிறோம். இதை உணர்ந்து ஒன்றுபட்டு இவ்விடரிலிருந்து வெளிவர முயற்சிப்பதே தப்புவதற்கான ஒரேவழி. தமிழர், சிங்களவர், முஸ்லிம்கள் என்றோ, வடக்கு, கிழக்கு, தெற்கு, மேற்கு என்றோ, அந்தக்கட்சி, இந்தக்கட்சி என்றோ பிரிந்து நின்று இவ்வீழ்ச்சிக்குக் கைதட்டி மகிழத் தொடங்கினால் கொப்பில் நின்று மரத்தை வெட்டியவன் கதையாய்த்தான் அது முடியும்.

(08ஆம் பக்கம் பார்க்க)

காலைக்கதிர்
Kalaikkathir

# தொடர்ந்தும் இராணுவ அடக்குமுறைக்குள்ளே நாட்டில் தமிழ் மக்கள் வாழ்கின்ற அவல நிலை!

## காணாமலாக்கப்பட்டோர் உறவுகள் தெரிவிப்பு

நாட்டில் தமிழ் மக்கள் இன்னும் இராணுவத்தின் அடக்குமுறைக்குள்ளேயே வாழ்கின்றனர் என காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தின் அம்பாறை மாவட்டத்தலைவியும் கிழக்கு மாகாண இணைப்பாளருமான தம்பிராசா செல்வராணி தெரிவித்துள்ளார்.

யாழ் மட்டுவிலில் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கு ஏற்படுத்தப்பட்ட கொடுமை தொடர்பில் கண்டனம் வெளியிடும் முகமாக மட்டக்களப்பில் உள்ள மட்டு ஊடகஅமையத்தில்இடம்பெற்றஊடகசந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதன் போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

அண்மையில் யாழ்.மட்டுவிலில் ஸ்ரீலங்கா பொலிஸார் அத்துமீறி எமது உறவுகள் மீது நடத்திய கொடுமையான அநியாயமான செயல்களைச் செய்துள்ளார்கள். எமது உறவுகள் சொல்ல முடியாத இடங்களில் எல்லாம் அடித்து, மிதித்து, தலைமுடிகளைப் பிய்த்துச் செய்த அந்தக் கொடுமையை வடக்கு கிழக்கு எட்டு மாவட்டங்களின் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கம் வன்மையான கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்கின்றது. எமது உறவுகள் அங்கு ஏன் சென்றார்கள். தற்போதைய பிரதமர் முன்னாள் ஜனாதிபதியாக இருக்கும் போதே எமது உறவுகள் காணாமல் ஆக்கப்பட்ட எமது உறவுகளை அவர்களிடம் ஒப்படைத்திருந்தார்கள். அவர் யாழ்ப்பாணம் வந்திருந்தமையால் அவரிடம் சென்று எங்கள் உறவுகள் எங்கே என்று கேட்பதற்காகவே சென்றிருந்தார்கள். வேறு எதற்கும் அவர்கள் அங்கே செல்லவில்லை.

அது மாத்திரமல்ல காணாமல் ஆக்கப்பட்டோருக்கான குழு மற்றும் காணாமல் ஆக்கப்பட்டோருக்கான செயற்குழு என்பனவற்றின் சந்திப்புடன் ஏனைய நாட்டின் பிரதிநிதிகளையும் சந்திப்பதற்காக எமது வவுனியா மாவட்டச் செயலாளர் ஜெனீவாவிற்குச் செல்ல இருந்த வேளையில் அவருக்கான வீசா மறுக்கப்பட்டது. அதேநேரம் தெற்குப் பிரதேசத்தில் இருந்து அனைத்து உறவுகளுக்கும் வீசா வழங்கப்பட்டது. அவர்கள் அங்கு சென்றிருந்தார்கள். எமது உறவுகளின் பிரச்சினைகளை நாங்கள் ஐ.நா. முன்றிலில் சென்று கதைப்பதற்கு எங்களுக்கு எவ்வளவு தடைகளை விதித்திருந்தார்கள்.

இன்றும் வீதிகளில் நின்று நாங்கள் எங்கள் உறவுகளைத் தேடிக்கொண்டிருக்கின்றோம். அதேநேரம் மட்டுவிலில் எமது உறவுகளுக்கு நடந்த கொடுமையையும் இன்று ஐ.நா. பார்த்துக் கொண்டுதான் இருக்கின்றது. ஐ.நா. எங்களது விடயத்தில் பாராமுகமாகச் செயற்படுகின்றது. இலங்கை அரசின் சொல்லைக் கேட்டு எங்களை முன்நின்ற பார்க்கவில்லை என்று எங்களுக்குத் தோன்றுகின்றது. நாற்பது ஆண்டுகாலமாக இராணுவக் கெடுபிடிக்குள் வாழ்ந்துகொண்டிருக்கும் நாங்கள் இன்னும் அத்தகைய இராணுவக் கெடுபிடிக்குள்ளே தான் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். – என்று தெரிவித்தார்.

# விடுதலைப் புலிகளால் பெறமுடியாமல் போனதை அரசியல் ஆயுதத்தால் கூட்டமைப்பு பெற முயற்சி!

## மகாநாயக்கர்களிடம் கம்மன்பில எடுத்துரைப்பு



புலிகளால் துப்பாக்கிமூலம் பெறமுடியாமல் போனதை, அரசியல் ஆயுதம்மூலம் பெறுவதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முயற்சிக்கின்றது என குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

மகாநாயக்க தேரர்களை வியாழக்கிழமை சந்தித்து ஆசி பெற்றபோதே பிவிதுரு ஹெல உறுமயவின் தலைவர் உதய கம்மன்பில இவ்வாறு குற்றம் சுமத்தியுள்ளார்.

இதன்போது கருத்து வெளியிட்ட அவர் –

சர்வ கட்சி மாநாட்டில் கூட்டமைப்பு பங்கேற்றதில் உள் நோக்கம் இருக்கின்றது.

தற்போதைய நெருக்கடி நிலைமையைப் பயன்படுத்தி தமது இலக்கை அடைவதற்கு கூட்டமைப்பினர் முற்படுகின்றனர்.

அதாவது புலிகளால் துப்பாக்கிமூலம் பெறமுடியாமல் போனதை, அரசியல் ஆயுதம் மூலம் பெற முற்படுகின்றனர்.

அனுமான் இலங்கையை தீயிட்டு அழித்தார் எனக் கூறப்படுகின்றது. அதுபோலவே அசிங்கமான அமெரிக்கரும் தற்போது நாட்டை அழித்துவருகின்றார்.

அரசுக்கான பெரும்பான்மையை இல்லாது செய்தால் அவர் அமெரிக்கா ஓடிவிடுவார். – எனத் தெரிவித்துள்ளார்.

# உலக வங்கியின் உதவியை நாடுகின்றது இலங்கை அரசு

இலங்கையின் கிராமப்புற அபிவிருத்தி, புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மற்றும் டிஜிற்றல் மயமாக்கல் திட்டங்களுக்கு உலக வங்கியின் உதவியை இலங்கை நாடுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஏற்கனவே பல திட்ட முன்மொழிவுகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன எனவும் மேலும் பல திட்டங்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன எனவும் கூறப்படுகின்றது.

இந்தத் திட்டங்களுக்காக உலக வங்கியிடம் இருந்து சுமார் 100 கோடி டொலர் நிதி உதவியை இலங்கை நாடுவதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ அடுத்த மாதம் அமெரிக்காவில் உலக வங்கி மற்றும் சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகளை சந்தித்துப் பேசவுள்ளார்.

இலங்கையின் அந்நிய செலாவணி கையிருப்பு வீழ்ச்சியடைய காரணமான கடன் சேவை தொடர்பில் இந்தக் கலந்துரையாடலின் போது கவனம் செலுத்தப்படவுள்ளது.

இலங்கையின் வெளிநாட்டு கையிருப்பு கடந்த ஆண்டு ஜனவரியில் இருந்து சுமார் 70 வீதத்தால் வீழ்ச்சியடைந்துள்ளது.

இதன் விளைவாக உணவு, எரிபொருள் மற்றும் ஏனைய அத்தியாவசியப் பொருள்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இதேவேளை, உலக வங்கி மற்றும் சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகளுடனான கலந்துரையாடலில், கடனை திருப்பிச் செலுத்தும் பொறிமுறையை மறுசீரமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் தொடர்பாகவும் இலங்கை ஆராயவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

# மண்முனை தென்மேற்கு பிரதேசசபை உறுப்பினர்களும் எரிபொருள் விலையேற்றத்தை கண்டித்து சைக்கிளில்!

எரிபொருள் விலையேற்றத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து மண்முனை தென் எருவில் பற்று பிரதேச சபைக்கு புதிதாக நியமிக்கப்பட்டுள்ள உறுப்பினர்கள் இருவர் சைக்கிளில் சபை அமர்வுக்கு சென்றுள்ளனர்.

மட்டக்களப்பு,மண்முனை தென் எருவில் பற்று பிரதேச சபையின் 49 ஆவது சபை அமர்வு சபையின் தவிசாளர் ஞா.யோகநாதன் தலைமையில் இடம்பெற்றது.

இதன் போது இரண்டு புதிய உறுப்பினர்களான இ.வேணுராஜ் மற்றும் த.ரவிந்திரன் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டனர்.

இவர்கள் இருவரும் எரிபொருள் விலைவாசி அதிகரிப்பிற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் சைக்கிளில் சபை அமர்விற்கு வருகை தந்தமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

இதன்போது புதிய உறுப்பினர்களுக்கு பிரதேச சபை உறுப்பினர்களால் வரவேற்பளிக்கப்பட்டதைத் தொடர்ந்து சபை அமர்வுதவிசாளரின் தலைமையில் சம்பிரதாயங்களுடன் ஆரம்பமானது.

சபை அமர்வின்போது பல்வேறு விடயங்கள் தொடர்பாக வாதப்பிரதிவாதங்கள் நடைபெற்றதுடன் பல்வேறு தீர்மானங்களும் எடுக்கப்பட்டன.

இதன்போது புதிய உறுப்பினர்களின் கன்னி உரைகளும் இடம்பெற்றமையுடன் இதன்போது புதிய உறுப்பினர்களின் கருத்துகள் தொடர்பில் காரசாரமான விவாதங்களும் நடைபெற்றன.

# சைக்கிள் திருடிய குற்றம் யாழில் இளைஞர் கைது!

யாழ்.நகர் பகுதியில் சைக்கிள் திருடிய குற்றச்சாட்டில் இளைஞன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கோப்பாய் பகுதியை சேர்ந்த 27 வயதான இளைஞன் ஒருவரே வியாழக்கிழமை மாலை யாழ்ப்பாண பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ்.போதனா வைத்தியசாலைக்கு முன்பாக சந்தேகத்துக்கு இடமான முறையில் சைக்கிள் ஒன்றை அந்த இளைஞன் எடுத்து சென்ற போது, அப்பகுதியில் கடமையில் இருந்த யாழ்ப்பாண பொலிஸார் இளைஞனை மறித்து விசாரணைகளை முன்னெடுத்த போது , சைக்கிளை இளைஞன் திருடி செல்வதைஅறிந்து இளைஞனை கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட இளைஞன் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு மேலதிக விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றார்.

அதேவேளை யாழ்.போதனா வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வரும் நோயாளிகளை பார்வையிட சைக்கியில் வருவோர், வைத்தியசாலை சூழலில் தமது சைக்கிளில் நிறுத்தி விட்டு செல்லும் போது அவை களவாடப்படுவது தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.

அது தொடர்பில் பல முறைப்பாடுகள் யாழ்ப்பாண பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்றுள்ள நிலையில் பொலிஸார் வைத்தியசாலை சூழலில் தமது கண்காணிப்பை தீவிரப்படுத்தியுள்ளனர்.

புதிய சைக்கிள் ஒன்றின் விலை தற்போது 35 ஆயிரம் ரூபாவுக்கும் அதிகமாக விற்பனை செய்யப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபைக்கு ஜனாதிபதி கோட்டாபய திடீர் விஜயம்!



ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ வியாழக்கிழமை காலை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபைக்கு கண்காணிப்பு விஜயமொன்றை மேற்கொண்டுள்ளார்.

மேற்படி இடத்திற்கு விஜயம் செய்த ஜனாதிபதி, அதிகார சபையின் பணிகளைக் கண்காணித்துள்ளார்.

இதன்போது சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை அதிகாரிகளுடன் ஜனாதிபதி சுமுகமான உரையாடலையும் மேற்கொண்டார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

காலைக்கதிர்
Kalaikkathir

## நான்கு பிரச்சினை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

பிரச்சினைகளுக்கு விரைந்து தீர்வு காணவும், அதன் பின்னர் அரசியல் தீர்வு குறித்து அடுத்த கட்டத்தில் ஆராயவும் நேற்றைய பேச்சில் இணக்கம் காணப்பட்டது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளான இலங்கைத் தமிழரசுக் கட்சி, தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் (புளொட்) ஆகிய கட்சிகளுக்கும், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவுக்கும் இடையில் நேற்று கலந்துரையாடல் நடைபெற்றது. ரெலோ இந்தக் கூட்டத்தைப் புறக்கணித்திருந்தது.

ஜனாதிபதி செயலகத்தில் முற்பகல் 10.30 மணி முதல் பிற்பகல் 1.30 மணி வரை இந்தச் சந்திப்பு நடந்தது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, அமைச்சர்களான சமல் ராஜபக்ஷ, ஜீ.எல்.பீரிஸ், அலி சப்ரி ஆகியோர் அரச தரப்பில் கலந்துகொண்டனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் அதன் தலைவர் இரா.சம்பந்தன், தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா, புளொட் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன், நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், சிவஞானம் சிறிதரன், சார்ள்ஸ் நிர்மலநாதன், இரா. சாணக்கியன், தவராசா கலையரசன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

கூட்டத்தின் தொடக்கத்தில் கருத்துத் தெரிவித்த இரா.சம்பந்தன், தமிழர்களின் இனப்பிரச்சினை வரலாற்றைச் சுருக்கமாகக் குறிப்பிட்டு, அரசுகள் மாறி மாறி ஏமாற்றி வரும் வரலாற்றைத் தெரிவித்தார்.

### அரசியல் தீர்வு

இரு தரப்பு கருத்துப் பகிர்வின் பின்னர், அரசியல் தீர்வு குறித்து முதலில் பேசப்பட்டது.

புதிய அரசமைப்பை உருவாக்கு வதற்காக ஜனாதிபதி நியமித்துள்ள நிபுணர் குழுவின் அறிக்கை கிடைத்துள்ளது. அது இப்போது மொழிபெயர்ப்புக்கு அனுப்பப்பட்டுள்ளது. அது வந்ததும் அதன் அடிப்படையில் அரசியல் தீர்வு குறித்து பேச்சு நடத்தலாம் என வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் கருத்து வெளியிட்டார்.

அந்த மொழிபெயர்ப்புடன் அந்த யோசனை வெளிவருவதற்கு எவ்வளவு காலம் எடுக்கும் என்று சம்பந்தன் கேட்டார். இரண்டு மாதங்கள் என்று பதில் அளிக்கப்பட்டது.

அப்படியானால், அரசியல் தீர்வு விடயத்தை இரண்டு மாதம் கழித்துப் பேசலாம். அதற்கு முன்னர் மக்களின் உடனடிப் பிரச்சினைகள் பற்றிப் பேசுவோம். அவற்றுக்குத் தீர்வு கண்ட பின்னர் அதில் இருந்து அரசியல் தீர்வு பற்றிப் பேசலாம் என்று இரண்டு தரப்பினரும் இணக்கம் கண்டனர்.

அரசியல் பிரச்சினைகள் பற்றிய பேச்சுகள் ஆரம்பமாக முன்னர் உடனடியாகத் தீர்க்கக்கூடிய பிரச்சினைகளை முன்வைத்தால் அவற்றைத் தீர்க்க நடவடிக்கை எடுப்பேன் என்று ஜனாதிபதியும் குறிப்பிட்டார்.

அந்த அடிப்படையில் நான்கு விடயங்கள் குறித்துப் பேசப்பட்டன.

### கைதிகள் பிரச்சினை

தமிழ் அரசியல் கைதிகளின் விவரத்தைக் கூட்டமைப்புத் தூதுக்குழு சுட்டிக்காட்டியது. கூட்டமைப்பினரிடம் நேற்று அரசியல் கைதிகள் விவரம் உறவினர்களால் கையளிக்கப்பட்டிருந்தது. அந்த விவரத்தின் அடிப்படையில் 48 அரசியல் கைதிகள் 10 வருடங்களுக்கும் மேலாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ளமையும், இன்னும் பலர் வழக்கு தொடரப்படாமல் தடுத்து வைக்கப்பட்டிருக்கின்றமையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பால் சுட்டிக்காட்டப்பட்டது.

நீண்ட காலமாகப் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் அரசியல் கைதிகள் தொடர்பில் நீதி அமைச்சர் அலி சப்ரியையும் சுமந்திரனையும் – ஒவ்வொரு கைதியின் விடயத்தையும் தனித் தனியாக ஆராய்ந்து, புதிய பரிந்துரையைக் கூட்டாகத் தமக்குச் சமர்ப்பிக்கும்படி ஜனாதிபதி கூறினார். அந்தப் பரிந்துரையின்படி தாம் நடவடிக்கை எடுப்பார் என்றார் ஜனாதிபதி. வழக்கு இருப்பவர்களை ஒன்றும் செய்ய முடியாது, ஏனையோரை விரைந்து உடன் விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறப்பட்டது.

அண்மையில் கைதுசெய்யப்பட்டவர்கள் கூட – குற்றச்சாட்டப்படாதோரைத் தாங்கள் விடுவித்துக் கொண்டிருக் கின்றனர் என்றார் நீதி அமைச்சர் சப்ரி. நாங்கள் தொடர்ந்து அதைச் செய்வோம், அடுத்த கூட்டத்துக்கு முன்னர் அந்தக் கைதிகளின் விடுதலையில் காத்திரமான முன்னேற்றம் இருக்க வேண்டும் என முடிவு செய்யப்பட்டது.

### நில அபகரிப்பு

அடுத்து நில அபகரிப்பு சம்பந்தப்பட்ட விடயம் கூறப்பட்டது.

வடக்கு, கிழக்கில் இடம்பெறும் காணி அபகரிப்பு தொடர்பில் கூட்டமைப்பினர் விலாவாரியாக எடுத்துரைத்தனர். இராணுவம் ஒரு பக்கமாகவும், தொல்லியல் திணைக்களம் ஒரு பக்கமாகவும், வனவள திணைக்களம் ஒரு பக்கமாகவும் காணி அபகரிப்பு செய்கின்றார்கள், வயல் நிலங்கள், வணக்க தலங்கள், குடியிருப்புக்கள் எனப் பல இடங்களை மக்கள் நுழையத் தடைவிதிப்பதாகவும் கூட்டமைப்பினர் தெரிவித்தனர்.

இந்தச் சந்தர்ப்பத்தில் ஜனாதிபதியும், பிரதமரும், இப்படியான விடயத்தைத் தாம் அறிந்திருக்கவில்லை என்ற பாணியில் கருத்துத் தெரிவித்தனர்.

'இராணுவத்தினர் காணி சுவீகரிக்கிறார்களா? அவர்களுக்கு எதற்குக் காணி?' என ஜனாதிபதி ஆச்சரியமாகக் கேள்வி எழுப்பினார்.

வயல் நிலங்களைச் சுவீகரிப்பது, மக்கள் நுழையத் தடைவிதிப்பதெல்லாம் ஏற்க முடியாத நடைமுறைகள் என ஜனாதிபதியும், பிரதமரும் தெரிவித்தனர்.

வடக்கு, கிழக்கில் இடம்பெறும் சகல விதமான காணி சுவீகரிப்பையும் நிறுத்த உத்தரவிடுமாறும், இது விடயமாகக் கூட்டமைப்புடன் கலந்துரையாடல் நடத்தி அடுத்தகட்ட நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் எனவும் கூட்டமைப்பு கோரியது.

உடனடியாக, அதற்கான நடவடிக்கையை எடுப்பதாக ஜனாதிபதி தெரிவித்தார்.

இராணுவத்தையோ, கடற்படையையோ, விமானப்படையையோ இனிக் காணி சுவீகரிப்பில் ஈடுபடக்கூடாது எனத் தாம் உத்தரவிட்டிருக்கின்றார் என்று கூறிய ஜனாதிபதி, அதை மீறி இனி எதுவும் நடக்காது என்றும் உறுதியளித்தார்.

எனினும், அத்தகைய அபகரிப்புகள் தொடர்கின்றன என விலாவாரியாக எடுத்துரைத்தனர் கூட்டமைப்பினர். அந்த விவரங்களைத் தாருங்கள்; இனிமேல் அப்படி நடக்காமல் தாம் உறுதியாகப் பார்த்துக் கொள்வார் என்றார் ஜனாதிபதி.

எல்லை மீள் நிர்ணயம் செய்து, இனப்பரம்பலை மாற்றி அமைக்கும் நடவடிக்கைகளை உடனடியாக நிறுத்த வேண்டும் என்று கூட்டமைப்பினர் கேட்டுக்கொண்டதற்கு ஜனாதிபதி இணங்கினார். கூட்டமைப்பினருடன் பேசாமல் வடக்கு, கிழக்கில் அத்தகைய மாற்றங்கள் ஏதும் இனி செய்யப்பட மாட்டாது என்று ஜனாதிபதி தரப்பில் உறுதி அளிக்கப்பட்டது.

மகாவலி அபிவிருத்தி சபை, தொல்லியல் திணைக்களம் போன்றன காணிகளைக் கபளீகரம் செய்யும் நடவடிக்கைகளும் வடக்கு, கிழக்கில் மேற்கொள்ளப்பட மாட்டாது என்றும், இனிமேல் அந்தத் தரப்புகள் கூட்டமைப்புடன் கலந்து பேசாமல் இத்தகைய நடவடிக்கைகளை எடுக்க மாட்டா என்றும், அதற்கான உத்தரவுகளை ஜனாதிபதி சம்பந்தப்பட்டோருக்கு வழங்குவார் என்றும் உறுதி கூறப்பட்டது.

வயல்களில் வேலை செய்வோர் தொல்லியல் திணைக்களத்தால் தடுக்கப்படுகின்ற விடயம் உடனடியாக நிறுத்தப்படும். தங்களின் வாழ்வாதாரத்துக்காக நீண்ட காலம் பயிர்செய்வோரை யாரும் தடுக்க முடியாது, அதற்கான உத்தரவு உரியவர்களுக்கு வழங்கப்படும் என உறுதி கூறப்பட்டது.

### காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம்

தொடர்ந்து காணாமல்போனோர் விவகாரம் ஆராயப்பட்டது. ஒரு இலட்சம் ரூபா வழங்கிய மக்களை ஏமாற்றப் பார்க்கிறீர்களா என்று சம்பந்தன் சீறினார்.

வழங்குவது நட்டஈடு அல்ல, அது உடனடி இடைக்கால நிவாரணம்தான், அது தவறாகப் புரிந்துகொள்ளப்பட்டுள்ளது என்று அரசு தரப்பில் கூறப்பட்டது.

ஒவ்வொருவர் குறித்தும், அவர்களுக்கு என்ன நடந்தது என்பதைக் கண்டறிவதற்கான உடனடி விசாரணைகள் தனித்தனியாக ஆரம்பிக்கப்படும். அடுத்த கூட்டத்துக்கு முன்னர் இதில் முன்னேற்றம் காணப்பட வேண்டும் என முடிவு செய்யப்பட்டது.

### வடக்கு - கிழக்கு அபிவிருத்திக்கு தனியான நிதியம்

நான்காவது விடயமாக வடக்கு – கிழக்கு பொருளாதார மீட்சிக்காக ஒரு விசேட அபிவிருத்தி நிதியம் ஒன்று உருவாக்கப்படும் என்று தீர்மானிக்கப்பட்டது. அதனைக் கூட்டமைப்புடன் சேர்ந்து அரசு முன்னெடுக்கும். அதன் மூலம் புலம்பெயர்ந்த மக்களின் முதலீடுகளை தருவிப்பதற்கு ஏற்ற சூழ்நிலைகளை அரசு உருவாக்கும். கூட்டமைப்புடனான அடுத்த கூட்டத்திற்கு முன்னர் அந்த நிதியம் உருவாக்கப்பட வேண்டும் என்றும் முடிவு செய்யப்பட்டது.

அரசமைப்பு உருவாக்கத்துக்காக ஜனாதிபதி நியமித்துள்ள நிபுணர் குழுவின் அறிக்கை அதன் மொழிபெயர்ப்போடு இரண்டு மாதங்களுக்குள் தயாரானதும் கூட்டமைப்பு – ஜனாதிபதி அடுத்த சுற்றுப் பேச்சு அதை அடிப்படையாக வைத்துத் தொடரும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அதற்கு முன்னர் மேற்படி நான்கு விடயங்களிலும் காத்திரமான நடவடிக்கை, கூட்டமைப்பைத் திருப்திப்படுத்தக் கூடிய விதத்தில் முன்னெடுக்கப்படும் என்ற உறுதிமொழி அரசு தரப்பில் வழங்கப்பட்டது.

---

## ஐ.தே.கவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

சம்பிக்க ரணவக்க கலந்து கொள்ளாத போதிலும், அவ்வமைப்பின் உறுப்பினர்கள் சிலர் பங்கேற்றனர்.

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கும் அக்கட்சியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான சம்பிக்க ரணவக்கவுக்கும் இடையில் தற்போது பனிப்போர் மூண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

---

## நாட்டைக் கட்டி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

இதனைக் கூறினார்.

நீண்டகாலமாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ள சந்தேகநபர்களை விடுவித்தல், குற்றஞ்சாட்டப்பட்டு வழக்குத் தொடரப்படாத சந்தேகநபர்கள் தொடர்பில் எதிர்கால நடவடிக்கைகளை முன்னெடுத்தல், உண்மையைக் கண்டறியும் பொறிமுறையை ஆரம்பித்தல், பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை மறுசீரமைத்தல், காணாமல்போனோர் தொடர்பான பிரச்சினைகளுக்கான தீர்வுகள் உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பில் அரசு செயற்பட்டு வருகின்றது என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

தொடர்ந்தும் ஒன்றிணைந்து செயற்படுவதன் மூலம், வடக்கு – கிழக்கு உட்பட நாட்டின் அனைத்து மக்களின் நோக்கங்களையும் நிறைவேற்றி, நாட்டை அபிவிருத்தியை நோக்கி நகர்த்த முடியும் என்றும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

## யாழ் கலாசார மண்டபத்தை 28 ஆம் திகதி திறக்க முடிவு

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், மார்ச் 26

யாழ்ப்பாணத்தில் இந்திய உதவித் திட்டத்தின் கீழ் கட்டப் பட்ட கலாசார மண்டபக் கட்டடத் தொகுதியை வரும் 28 ஆம் திகதி திறப்பதற்கு ஏற்ற ஒழுங்கை மேற்கொள்ளுமாறு யாழில் உள்ள இந்தியத் துணைத் தூதரகம் மாநகர சபையைக் கோரியுள்ளது. யாழ்ப்பாணம் மாநகர சபைக்குச் சொந்தமான நிலத்தில் இந்திய அரசினால் 100 கோடி ரூபா (இந்தியப் பணத்தில்) செலவில் இந்தக் கட்டடத் தொகுதி அமைக்கப்பட்டது.

இதேநேரம் இந்த மண்டபத்தைத் திறக்க இந்தியப் பிரதமர் அல்லது இந்திய வெளிவிவகார அமைச்சர் யாழ்ப்பாணம் வரலாம் என எதிர்பார்க்கப்பட்ட நிலைமையில் தற்போது இருவருமே யாழ்ப்பாணத்திற்கு வருகை தராது வீடியோ காணொலி மூலம் இந்த நிகழ்வு இடம்பெறவுள்ளது எனத் தெரிய வருகின்றது.

---

## 13ஐ முழுமையாக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

ஜனாதிபதிக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கும் இடையிலான பேச்சு நேற்று ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றது. இதன்போதே சம்பந்தன் மேற்கண்டவாறு கேள்வி தொடுத்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

ஐக்கிய இலங்கையில் அரசியல் தீர்வின் மூலம் நாட்டை சுபீட்சத்தை நோக்கி நகர்த்துவதே எமது எதிர்பார்ப்பாகும்.

நாம் ஒரு நாடாக ஒன்றுபட வேண்டும். ஒரு நாடு, ஒரே மக்கள் என்று செயற்பட்டு, நாட்டின் தற்போதைய நிலைமையில் இருந்து, நாட்டை விடுவிப்பது அனைத்துத் தரப்பினரின் பொறுப்பாகும்.

இலங்கை, கிழக்கு சுவிட்சர்லாந்தாக மாறுவதைக் காண விரும்புகின்றோம் – என்றார்.

---

## ஆட்சி மாற்றம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

தலைவர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியால் கொழும்பில் நேற்று சத்தியாக்கிரகப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. இதில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதேவேளை, நாட்டை மீட்டெடுப்பதற்கு அனைவரும் ஒன்றிணைந்து தேசிய வேலைத்திட்டமொன்றை உருவாக்க வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச்செயலாளர் பாலித ரஞ்கே பண்டார தெரிவித்தார்.

தற்போதைய சூழ்நிலையில் இருந்து மீளவேண்டுமெனில் அரசியல் பேதங்களுக்கு அப்பால், தேசிய கொள்கைத் திட்டங்களின் அடிப்படையில் செயற்பட வேண்டும். 20 ஆண்டுகள் வரை இணைந்து பயணிக்க வேண்டும். அதற்காக நாம் அனைவருக்கும் அழைப்பு விடுக்கின்றோம் என்றும் பாலித ரங்கே பண்டார மேலும் குறிப்பிட்டார்.

---

## கொழும்பில் ஐக்கிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

போராட் டத்தில் ஆயிரக்கணக் கானவர்கள் பங்கேற்றதுடன், பொது இணக்கப்பாட்டுடனான தேசிய வேலைத்திட்டமொன்றை வலியுறுத்தினர்.

சத்தியாக்கிரகப் போராட்டத்தில் பங்கேற்றவர்கள் வெள்ளை ஆடை அணிந்திருந்தனர். அரசுக்கு எதிராகக் கோஷம் எழுப்பவில்லை. ஆட்சி மாற்றத்தையும் வலியுறுத்தவில்லை. மாறாக நாட்டை மீட்பதற்கான தேசிய வேலைத்திட்டம் வேண்டும் என்றே கருத்து வெளியிட்டனர்.

சத்தியாக்கிரகப் போராட்டத்தின் நிறைவில், எமது நாட்டை ஒன்றிணைந்து காப்போம் எனச் சத்தியப்பிரமாணமும் செய்யப்பட்டது.

# இலங்கையுடனான ஆளுமைவிருத்தி பங்குடைமையை கொண்டாடியது இந்தியாவின் உயர் தூதரகம்





கொழும்பு, மார்ச் 26

இந்திய உயர் தூதரகத்தின் ஏற்பாட்டில் 2022 மார்ச் 23 ஆம் திகதி இந்திய தொழில்நுட்ப மற்றும் பொருளாதார ஒத்துழைப்பு தினம் ஹோட்டல் தாஜ் சமுத்திராவில் கொண்டாடப்பட்டது.

ஐ.ரி.ஈ.ஓ பயிற்சித் திட்டங்களில் கலந்து கொண்டவர்கள், இந்தியாவில் நடைபெற்ற பல்வேறு பயிற்சிகளில் கலந்துகொண்ட பலதரப்பட்ட துறைகளையும் சார்ந்த உத்தியோகத்தர்கள், இலங்கை அரசாங்கத்தின் அமைச்சுக்களைச் சேர்ந்த அதிகாரிகள் மற்றும் ஈ – ஐ.ரி.ஈ.ஓ அமர்வுகளில் கலந்துகொண்டவர்கள் உட்பட கிட்டத்தட்ட 125 விருந்தினர்கள் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

திறன்கள் அபிவிருத்தி, தொழில் கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கல் இராஜாங்க அமைச்சர் டாக்டர் சீதா அரம்பேபொல இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டிருந்தார். அத்துடன் உயர் ஸ்தானிகர் கோபால் பாக்லேயும் இந்நிகழ்வில் கலந்துகொண்டு சிறப்பித்திருந்தார்.

இருநாடுகளுக்கும் இடையில் பல்வேறு துறைகளிலும் வலுவான நிலையில் காணப்படும் வரலாற்று ரீதியான உறவுகள் தொடர்பாக இங்கு கருத்துக்களை முன்வைத்திருந்த அமைச்சர் டாக்டர் சீதா அரம்பேபொல, இலங்கையில் வளர்ச்சி மற்றும் அபிவிருத்தி துறைகளில் மனித வள அபிவிருத்தியை மேம்படுத்துவதற்கான இந்தியாவின் ஆதரவைப் பாராட்டினார்.

அதுமட்டுமல்லாமல் இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு தலைமுறை ஒன்றை உருவாக்குவதற்காக திறன் விருத்தி மற்றும் தொழில் பயிற்சி உள்ளிட்ட துறைகளில் இருதரப்பு ஒத்துழைப்பை வலுவாக்குவதற்கான ஆர்வத்தையும் அவர் இங்கு வெளிப்படுத்தியிருந்தார்.

இந்த நிகழ்வில் உரையாற்றியிருந்த பிரதி உயர் ஸ்தானிகர் வினோத் கே ஜேக்கப் , திறன் விருத்தி செயற்பாடுகளில் இலங்கைக்காக இந்தியா வழங்கும் தொடர்ச்சியான ஆதரவு உலகம் ஒரே குடும்பம் என்ற தத்துவத்தை சுட்டிக்காட்டுவதாக குறிப்பிட்டிருந்ததுடன், உலகளாவிய ரீதியிலுள்ள நாடுகளில் ஆளுமை விருத்திச் செயற்பாடுகளை மேம்படுத்துவதற்காக இந்தியா தனது உதவிகளை வழங்கி வருகின்றமை பற்றியும் தெரிவித்திருந்தார்.

கொவிட் பெருநோய் சூழலிலும் இவ்வாறான பயிற்சிகளைத் தொடர வேண்டும் என்ற நோக்கத்துடன் 2020 ஏப்ரல் முதல் மெய்நிகர் மார்க்கங்கள் ஊடாக இவ்வாறான பயிற்சிகள் மேற்கொள்ளப்பட்டுவரும் அதேவேளை அந்தக் காலப்பகுதியில் இலங்கையைச் சேர்ந்த 600 இற்கும் அதிகமான உத்தியோகத்தர்கள் தொடர்பாகப் பயிற்சிகளின் மூலம் நன்மையடைந்துள்ளனர். இந்தப் பயிற்சிகளில் கலந்து கொண்டிருந்தவர்கள் தமது அனுபவங்களையும் இந்த நிகழ்வில் பகிர்ந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்திய அரசாங்கத்தின் உதவியின் கீழான ஓர் இருதரப்பு நிகழ்ச்சித் திட்டமாக இந்திய தொழில்நுட்ப மற்றும் பொருளாதார ஒத்துழைப்பு நிகழ்ச்சித்திட்டம் 1964 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. இந்தத் திட்டத்தின்கீழ் உத்தியோகத்தர்களுக்கான பயிற்சிகள் மற்றும் ஆளுமைவிருத்தி செயற்பாடுகளை முன்னெடுப்பது மிகவும் முக்கியமான பணியாக உள்ளது.

சிவில் மற்றும் பாதுகாப்புத் துறைகளுடன் தொடர்புடைய பயிற்சிகள் வழங்கப்படும் அதேவேளை கணக்கீடு, கணக்காய்வு, வங்கியியல் மற்றும் நிதியியல் செயற்பாடுகள் முதல் சைபர் தொழில்நுட்பம் வரையிலும் சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றம் முதல் முகாமைத்துவம் மற்றும் தலைமைத்துவம் வரையிலும் மனித வள அபிவிருத்தி மற்றும் திட்டமிடல் முதல் ஏற்பாட்டியல் மற்றும் முகாமைத்துவம் வரையிலும் ஊடகம் முதல் நகர திட்டமிடல் வரையிலும் கடல் சார் செயற்பாடுகள் மற்றும் விமானத்துறை சார்ந்த பொறியியல் முதல் பெண்களுக்கான மேம்பாடுகள் வரையிலுமான கிட்டத்தட்ட 25 இற்கும் அதிகமான துறைகளைச் சேர்ந்த கற்கைநெறிகள் இந்தத் திட்டத்தின்கீழ் முன்னெடுக்கப்படுகின்றன.

இந்நிலையில் மிக முக்கியமான ஐ.ரி.ஈ.ஓ பங்காளி நாடுகளில் இலங்கைக்கும் முக்கிய இடம் வழங்கப்பட்டுள்ளதுடன் இலங்கையைச் சேர்ந்த அரசாங்க உத்தியோகத்தர்கள் மற்றும் ஏனையோரின் தொழில் திறனை மேம்படுத்தும் நோக்கத்துடன் ஒவ்வொரு வருடமும் பூரண நிதி ஆதரவுடனான 402 ஆசனங்கள் இலங்கைக்காக ஒதுக்கப்படுகின்றன.

# ரஞ்சன் குற்றத்தை ஒப்புக்கொண்டார்!

தன் மீது முன்வைக்கப்பட்டுள்ள 2 ஆவது நீதிமன்ற அவமதிப்பு குற்றச்சாட்டை முன்னாள் பிரதி அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க ஒப்புக்கொண்டுள்ளார்.

நீதிமன்றத்தை அவமதித்த குற்றச்சாட்டில் தற்போது சிறைத்தண்டனை அனுபவித்து வரும் முன்னாள் அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்கவுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள இரண்டாவது முறைப்பாடு நேற்று (வெள்ளிக்கிழமை)உயர்நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது ரஞ்சன் ராமநாயக்க இவ்வாறு தனது குற்றத்தை ஒப்புக் கொண்டுள்ளார் எனத் தெரியவந்துள்ளது.

இந்த முறைப்பாடு நீதியரசர்களான புவனேக அலுவிஹாரே, எல்.டி. பி. தெஹிதெனிய மற்றும் காமினி அமரசேகர ஆகிய மூவரடங்கிய நீதிபதிகள் குழாம் முன்னிலையில் நேற்று அழைக்கப்பட்ட போதே ரஞ்சன் ராமநாயக்க இதனைத் தெரிவித்துள்ளார்.

சிறைச்சாலை அதிகாரிகள் ரஞ்சன் ராமநாயக்கவை நீதிமன்றத்துக்கு அழைத்து வந்தனர்.

ரஞ்சன் ராமநாயக்க இந்த குற்றச்சாட்டுக்களில் தான் நிரபராதி என்று முன்னர் நீதிமன்றில் தெரிவித்திருந்தார்.

எவ்வாறாயினும், இந்த முறைப்பாடு நேற்று அழைக்கப்பட்ட போது, ரஞ்சன் ராமநாயக்க சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி அநுர மத்தேகொட, தனது கட்சிக்காரர் தான் நிரபராதி என முன்னர் தெரிவித்திருந்தமையை வாபஸ் பெற்றுக் கொள்வதற்கும் குற்றத்தை ஒப்புக்கொள்வதற்கும் தயாராக உள்ளார் எனத் தெரி வித்தார்.

அதனையடுத்து, மூவரடங்கிய நீதிபதிகள் குழாம் ரஞ்சன் ராமநாயக்கவை அழைத்து இது தொடர்பில் விசாரித்துள்ளனர்.

மேற்படி குற்றச்சாட்டுகளுக்கு தான் நிரபராதி என முன்னர் தன்னால் தெரிவிக்கப்பட்ட கூற்றை திரும்பப் பெறுகிறேன் எனவும் குற்றத்தை ஒப்புக் கொள்கிறேன் எனவும் ரஞ்சன் ராமநாயக்க இதன்போது தெரிவித்துள்ளார்.

கண்ணீர் அஞ்சலி

அமரர்

சரோஜினிதேவி இராஜரட்ணம்



(Tamil Para Sports, DATA Charity
இயக்குனர் திரு இரா. உதயராஜ்
அவர்களின் தாயார்)

அன்னாரின் ஆத்ம சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

ஆழ்ந்த வருத்தத்துடன்

DATA CHARITY

மண்ணில் 1943.03.04

விண்ணில் 2022.03.24

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551A கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 26.03.2022இல் வெளியிடப்பெற்றது.